# பத்திரிக்கை செய்தி

## லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக முன்னாள் தாசில்தார், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கு மூன்று வருட சிறை தண்டனை

லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக தண்டனை பெற்றுள்ள திரு.J.சம்பத், த/பெ.ஜெயராமன் என்பவர் காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாசில்தார் அலுவலகத்தில், தாசில்தரராக (தற்போது பணியிடை நீக்கம்) கடந்த 05.07.2010 முதல் 26.05.2011 வரை பணிபுரிந்துள்ளார்.

Royal Splendor and Developers Pvt. Ltd., என்ற நிறுவனத்திற்கு சொந்தமான சர்வே எண்.75/12J, முகலிவாக்கம் என்ற இடத்தில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்காக, இந்நிறுவனத்தின் சார்பாக கட்டிட வரைபட அனுமதி வேண்டி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழும கடித எண்.PC1/18227/2010, நாள்.28.04.2011 மூலமாக சான்றளிக்கப்பட்ட தொகுதி வரைபடம் (Block Map) சமர்ப்பிக்க வேண்டி, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாசில்தாருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்திற்கு காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாசில்தார் அலுவலகத்தில் எவ்வித பதில் கடிதமும் அனுப்பபடவில்லை. இதுசம்மந்தமாக இவ்நிறுவனத்தின் மேலாளராக பணிபுரியும் திரு.M.ராஜா (புகார்தாரர்) என்பவர், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாசில்தார் திரு.J.சம்பத் அவர்களை 25.05.2011 அன்று மாலை சுமார் 6 மணிக்கு அணுகி சான்றளிக்கப்பட்ட தொகுதி வரைபடம் (Block Map) பற்றி கேட்டபோது, அதற்கு எதிரி திரு.சம்பத் ரூ.10,000/- லஞ்சமாக கொடுத்ததால் தான், தொகுதி வரைபடம் (Block Map) வழங்குவேன் என்று உறுதியாக கூறியுள்ளார்.

புகார்தாரருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாததால் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுக்குழுவில் புகார் கொடுத்துள்ளார். அதன்பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுக்குழு 26.05.2011 அன்று வழக்கு

பதிவு செய்து, சான்றளிக்கப்பட்ட தொகுதி வரைபடம் (Block Map) வழங்குவதற்கு ரூ10,000/- லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக திரு.J.சம்பத் அவர்களை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கானது, செங்கல்பட்டு முதன்மை நீதிமன்றம்/ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்நிலையில், மேற்படி முன்னாள் தாசில்தார் திரு.J.சம்பத் மீது குற்றம் உறுதி செய்யப்பட்டு இன்று 31.05.2023இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் தாசில்தார் திரு. திரு.J.சம்பத் அவர்களுக்கு சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act, 1988 கீழ் மூன்று ஆண்டுகள் சிறைதண்டனையும், ரூபாய் இருபதாயிரம் அபராதமும் மற்றும் u/s.13(2) r/w.13(1)(d) of Prevention of Corruption Act, 1988-ன் படி மூன்று ஆண்டுகள் சிறைதண்டனையும், ரூபாய் இருபதாயிரம் அபராதமும் ஏக காலத்தில் அனுபவிக்குமாறு தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

# PRESS NOTE

## The Accused Tr.J.Sampath, S/o R.Jayaraman worked as Special Tahsildar O/o Tahsildar Taluk office, Sriperumbudur, Kancheepuram (Now under suspension).

The Royal Splendour and Developers Pvt Ltd. company had applied for Plan permission for constructing Multi- Storied Apartments at Mukalivakkam Village in Survey No 75/12J to CMDA. Subsequently the CMDA authorities asked for the Block map of the site from the Tahsildar, Sriperumbudur. As there was no response from the Special Tahsildar Sriperumpudur, the complainant Tr.M.Raja, S/o Munisamy, then Manager in Royal Splendour and Developers Pvt Ltd, met the Special Tahsildar Sriperumbudur on 25.05.201. The said Tahsildar demanded Rs.10,000/- as bribe to issue certified copy of Block Map. In pursuance of above said demand, the complainant met the Tahsildar, Sriperumbudur on 25.05.2011 at 18.00 hrs at his office where he reiterated his earlier demand of Rs.10,000/-from the complainant. The complainant was unwilling to pay the bribe and lodged a complaint before V&AC. A case was registered by Vigilance and Anti- corruption against Tr.J.Sampath, Special Tahsildar, Sriperumpudur. A trap was organized on 26.05.2011, at the office of Tahsildar, Taluk office, Sriperumbudur. The Special Tahsildar Tr.J.Sampath obtained the bribe amount of Rs. Rs 10,000/- from the complainant for himself.

The above said case was charge sheeted and was under trial at the Chief Judicial Magistrate, Chengelpattu. Today 31.05.2023 the Hon'ble judge delivered the Judgment and accused Tr.J.Sampath, formerly Special Tahsildar, Sriperumbudur was convicted for the offence committed u/s 7 of Prevention of Corruption Act, 1988, and sentenced to undergo rigorous imprisonment for 3 years and fine of Rs.20,000/- and in default to undergo simple imprisonment for 6 months and u/s13(2) r/w 13(1)(d) of Prevention of Corruption Act, 1988, and sentenced to undergo rigorous imprisonment for 3 years and shall pay a fine of Rs.20,000/- and in default to undergo simple imprisonment for 6 months which run concurrently.